இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 71 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 03 – ஞாயிற்றுக்கிழமை 20 அக்டோபர் 2024 – சென்னை 16+8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 71: Thiruvalluvar Year - 2055 - Ayppasi 03 - Sunday 20 October 2024 - Chennai 16+8 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.10.2024) சென்னை, கிண்டியில் நடைபெற்ற 2024–ஆம் ஆண்டிற்கான தென் மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் ஒருங்கிணைப்பு மாநாட்டை தொடங்கி வைத்து, காவல் துறை தலைமை இயக்குநர்களுக்கு "தமிழரின் தாய்மடியாம் கீழடி நாகரிகத்தைப் பறைசாற்றும்" நினைவுச் சின்னத்தை வழங்கி சிறப்பித்தார். இதனை கேரள மாநிலத்தின் காவல் துறை தலைமை இயக்குநர் சேக் தர்வேஷ் சாகேப் பெற்று கொண்டார். உடன் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர்கள் சங்கர் ஜிவால், (தமிழ்நாடு), அலோக் மோகன், (கர்நாடகா), திருமதி. ஷாலினி சிங், (புதுச்சேரி), துவாரகா திருமல ராவ், (ஆந்திரா) மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

# பொதுமக்கள் பாதுகாப்புக்கு இணைந்து செயலாற்றுவோம்!

## தென் மாநில காவல்துறை இயக்குநர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, அக். 20 –**

**சென்னையில் நடைபெற்ற தென் மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, "போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது" என்றும், "பொதுமக்கள் பாதுகாப்புக்கு இணைந்து செயலாற்றுவோம்" என்றும் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.10.2024) தென் மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் ஒருங்கிணைப்பு மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு:-

உங்கள் அனைவரையும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், தமிழ்நாட்டிற்கு வருகை தந்திருக்கக்கூடிய உங்கள் அனைவரையும் மீண்டும், மீண்டும் நான் வருக!வருக! என்று வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**குற்றங்களை எதிர்கொள்வதில் தமிழ்நாடு அடைந்த முன்னேற்றம்!**

சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு நீர் மேலாண்மை போன்ற பல்வேறு அடிப்படையில் தென்மாநிலங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நாம் செயல்பட்டு வருகிறோம். அந்தவகையில் மிகமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளான போதைப்பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கிடையேயான குற்றச்செயல்கள், இணையவழிக் குற்றங்கள் போன்ற தீவிர குற்றச்சம்பவங்களில் இருந்து, நம்மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்ற பொதுவான குறிக்கோளை அடைவதற்கு இங்கு நாம் கூடியிருக்கிறோம். இத்தகைய குற்றங்களை எதிர்கொள்வதில் தமிழ்நாடு காவல்துறை பல்வேறு முன்னேற்றங்களை அடைந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு காவல்துறையும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரகவனம் செலுத்தி வருகிறது. போதைப் பொருள் விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றை தடுப்பதற்கு நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்.

தமிழ்நாடு காவல்துறையின் தொடர் முயற்சிகளின் பலனாக, மாநிலத்தில் கஞ்சா பயிரிடப்படுவது தடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வியூகங்களை நாங்கள் கையாண்டு வருகிறோம்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (19.10.2024) சென்னை, கிண்டியில் நடைபெற்ற 2024–ஆம் ஆண்டிற்கான தென் மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள் ஒருங்கிணைப்பு மாநாட்டைத் தொடங்கி வைத்து, உரையாற்றினார். உடன், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர்கள் சங்கர் ஜிவால் (தமிழ்நாடு), அலோக் மோகன் (கர்நாடகா), சேக் தர்வேஷ் சாகேப் (கேரளா), திருமதி. ஷாலினி சிங் (புதுச்சேரி), துவாரகா திருமல ராவ், (ஆந்திரா) மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தீவிர சட்ட அமலாக்கம் மூலம் போதைப் பொருள்கள் ஒழிப்பு!**

ஒன்று, கைது செய்வதோடு மட்டுமின்றி சொத்து பறிமுதல், வங்கிக்கணக்கு முடக்கம், கடைகளுக்கு சீல், கடுமையான அபராதம், கடும் சிறைத்தண்டனை பெற்றுத்தருவது உள்ளிட்ட தீவிர சட்ட அமலாக்கம் மூலமாக போதைப்பொருள்களை ஒழிப்பது!

இரண்டாவது, போதைப்பொருட்களின் தீமைகளை மாணவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது, கல்வி நிலையங்கள் அருகில் போதைப் பொருள் விற்பனையைத் தடுப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள்! இவை மிக நல்ல பலன்களைக் கொடுத்திருக்கிறது.

உயர் அதிகாரிகளுடன் நடத்தப்படும் தொடர் ஆய்வுக் கூட்டங்கள் மூலம் தமிழ்நாட்டை போதைப் பொருட்கள் இல்லாத மாநிலமாக உருவாக்கும் சரியான பாதையில் செல்வது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

போதைப்பொருள் குற்றவாளிகளின் மீது பொருளாதார நடவடிக்கைகள் எடுப்பதில் தமிழ்நாடு காவல் துறை முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இதன் மூலம் குற்றவாளிகளின் பொருளாதார பலம் தகர்க்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், போதைப் பொருள் குற்றவாளிகளின் தொடர்பு மற்றும் அவர்களது சொத்துகள் பல மாநிலங்களில் பரவிக் கிடக்கிறது.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## 27 மாநிலங்களில் மும்மொழித் திட்டம் பின்பற்றப்படுகிறதா?

# ஆளுநர் ரவி கற்பனை உலகத்தில் இருக்கிறார்!

## முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் கண்டனம் !

சென்னை, அக். 20 –

"இந்தியாவின் 28 மாநிலங்களில் 27 மாநிலங்களில் மும்மொழித் திட்டம் பின்பற்றப்படுவதாக ஆளுநர் ரவி கூறியிருப்பது அவர் கற்பனை உலகத்தில் இருக்கிறார்" என்று முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் கூறியுள்ளார்.



இதுகுறித்து அவர் தமது "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

இந்தியாவின் 28 மாநிலங்களில் 27 மாநிலங்களில் மும்மொழித் திட்டம் பின்பற்றப்படுவதாக ஆளுநர் கூறியிருக்கிறார். அவர் கற்பனை உலகத்தில் இருக்கிறார் என்று பணிவுடன் சொல்ல விரும்புகிறேன்.

பல இந்தி பேசும் மாநிலங்களில் குறிப்பாக பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், பீகார், ஜார்க்கண்ட் பல அரசுப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்றுத் தரப்படுவதில்லை, ஆங்கில வகுப்புகளை நடத்துவதில்லை, அப்படி நடந்தாலும் வகுப்புகளில் மொழிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. பல்லாயிரம் 'ஆங்கிலம் கற்ற' மாணாக்கர்கள் ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் பேச அல்லது எழுத இயலாதவர்கள் என்பதை நான் நேரடியாக அறிவேன். அங்கு மும்மொழித் திட்டம் செயல்பாட்டில் இல்லை. ஆழமாகப் பார்த்தால், அங்கு 'ஒரு மொழித் திட்டம்' தான் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டாவது மொழி என்ற பெயரில் இந்தி மொழிக்கு நெருங்கிய தொடர்புள்ள சமஸ்கிரதம், பஞ்சாபி, போஜ்புரி போன்ற மொழிகள் ஒப்புக்காக 'கற்பிக்கப் படுகிறது'. தென் மாநில மொழிகள் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் 95 சதவீதப் பள்ளிகளில் கற்றுத்தரப்படுவதில்லை, அதற்கான ஆசிரியர்களும் நியமிக்கப் படவில்லை என்பதே உண்மை

தமிழ் நாட்டில் மாநில அரசுப் பள்ளிகளைத் தவிர தனியார் பள்ளிகள், CBSE, ICSE பள்ளிகள் மற்றும் மத்திய அரசு நடத்தும் KV பள்ளிகளில் இந்தி கற்றுத் தரப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்த செய்தி. தமிழ்நாட்டில் இந்தி மொழியைக் கற்க விரும்பும் மாணவ, மாணவிகளுக்கு எந்தத் தடையும் கிடையாது.

தட்சிண பாரத இந்தி பிரசார சபையின் பல நிலைத் தேர்வுகளை ஆண்டு தோறும் தமிழ்நாட்டில் பல்லாயிரம் மாணவர்கள் எழுதி தேர்ச்சி பெறுகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த செய்தி ஆளுநர் அவர்கள் உண்மைச் செய்திகளின் அடிப்படையில் அரசின் கொள்கை பற்றி விவாதிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் கூறியுள்ளார்.

## 23.40 கோடி பேர் பசியால் பரிதவிப்பு!

# உலகளாவிய வறுமைப் பட்டியலில் இந்தியா முதலிடம்!

## ஐ.நா. - ஆக்ஸ்போர்டு அமைப்பு நடத்திய ஆய்வில் அதிர்ச்சித் தகவல்!

நியூயார்க், அக். 20–

2024ம் ஆண்டில் உலகளவில் வறுமையில் உள்ளவர்கள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் இருப்பதாக ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

ஐ.நா. வளர்ச்சி திட்டம், ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு அமைப்பு இணைந்து கடந்த 2010ம் ஆண்டு முதல் பல பரிமாண வறுமை குறியீடுகளை வெளியிட்டு வருகிறது.

இந்த பல பரிமாண வறுமை குறியீடு என்பது வீட்டு வசதி, சுகாதாரம், மின்சாரம், சமையல் எரிபொருள், ஊட்டச்சத்து, தண்ணீர் மற்றும் குழந்தைகள் பள்ளி வருகை உள்ளிட்டவைகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

2024ம் ஆண்டுக்கான உலகளாவிய பல பரிமாண வறுமை குறியீடு தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "போர் மற்றும் அமைதியின்மை நிலவும் நாடுகளில் வசிக்கும் 45.50 கோடி மக்கள் வறுமையில் சிக்கி உள்ளனர்.

இது மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதமாகும். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 18 வயதுக்குள்பட்டவர்கள். உலகளவில் 27.9 சதவீதம் குழந்தைகள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிராந்திய ரீதியாக 83.2 சதவீதம் பேர் சப்சஹாரா, ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் வாழ்கின்றனர்.

தற்போது நடத்தப்பட்ட ஆய்வின்படி 112 நாடுகளில் வசிக்கும் 630 கோடி பேரில் 110 கோடி மக்கள் வறுமையின் பிடியில் உள்ளனர். இந்த ஆய்வின்படி முதலிடத்தில் இந்தியா உள்ளது.

இந்தியாவில் 23.40 கோடி மக்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி உள்ளனர். அதற்கு அடுத்தபடியாக, பாகிஸ்தானில் 9.30 கோடி மக்களும், எத்தியோப்பியாவில் 8.60 கோடி மக்களும், நைஜீரியாவில் 7.40 கோடி பேரும், காங்கோ நாட்டில் 6.60 கோடி பேரும் வறுமையில் உள்ளனர்.

அண்மை காலங்களில் நாடுகளுக்கிடையே மோதல்கள் அதிகரித்துள்ளன. இதனால் ஏராளமான மக்கள் உயிரிழந்து வருகின்றனர். போருக்கு பயந்து லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றனர். இதனால் அவர்களின் வாழ்க்கையும், வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிற பாதிப்புகள்!**

போர் நடக்கும் நாடுகளில் வசிக்கும் ஏழை மக்களில் நான்கு பேரில் ஒருவர் மின்வசதியின்றி இருப்பதாக தெரிய வந்துள்ளது. அதே சமயம் போர் உள்ளிட்ட சிக்கல்கள் இல்லாத நாடுகளில் வசிக்கும் 20 ஏழைகளில் ஒருவர் மட்டுமே மின்வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளார். போர் நடக்கும் நாடுகளில் 4.4 சதவீத குழந்தைகளின் கல்வி, 7.2 சதவீத சத்துணவு பாதிக்கப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.